Subscription

Inland: Rs. 50/- per year.

FOR ADVERTISEMENTS

Apply to:
The Manager,
'Morning Star', Vaddukoddai.

THE MORNING STAR

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. QJ/J/29/News/85

Established: 1841: A Christian Weekly : Published Every Friday

Vol. 146 JAFFNA, FRIDAY, 7th NOVEMBER, 1986 No. 45

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

UNDELIVERED ISSUES

Please re-address all undelivered issues of the **Morning Star** to:-
The Manager,
"Morning Star",
Vaddukoddai.

Church of North India

The 6th Synod of the Church of North India was held at St. Stephen's College, Delhi from the 3rd to the 9th of October, 1986. The Rev. M. Azariah, General Secretary of the Church of South India Synod attended the above Synod as a fraternal Guest.

The theme of the Synod was "You shall be my witnesses". The members struggled with the theme through the Study of the word of God realising that Christians are called upon to witness "a world torn by systemic sin", and "in a pluralistic society". The Church is also called to witness for "a new Order" which demands "new life styles" and for "a different tomorrow". In order to be effective winesses Christians need to be "filled with power in Christ".

The Synod elected its new offiice bearers for the next biennium.

Moderator: The Most Rev Din Dayal, Bishop of Lucknow.

Deputy Moderator: The Rt. Rev. John E. Ghose, Bishop of Darjeeing.

Treasurer: Mr. A. K. De.

General Secretary: The Rev. Pritam B. Santran (re-elected).

We extend our congratulations and prayers for God's blessings on these new Officers of the Church of North India Synod.

Bishop Lakshman Wickremasinghe Memorial Meeting

Bishop Laksman Wickremasinghe Memorial Committee conducted a meeting to remember the late Rt. Rev. C. L. Wickremasinghe, at St. Johns College Jaffna on Saturday the first instant.

Rev. Father Paul Casperz, Rev. Yohan Devanandha and Mr. K. Nesiah addressed the meeting. The meeting was presided over by Rev. Father M. Jeyaseelan.

Rev. Yohan Devanandha said that Bishop Wickremasinghe was not only a man of prayer but also a man of action whose main concern was the upliftment of the downtrodden, the lowly and the lost.

Rev. Fr Paul Casperz said that Bishop Leo and Bishop Wickremasinghe were still present with us in spirit. He also said that after 1956 there was a significant change in the outlook and the attitude of the Church in Sri Lanka. Mr. Nesiah asid that Bishop Lakshman was a friend, prophet and patriot,

Invite the U. N. Working Group on Disappearances to Visit Sri Lanka — A. I.

"Invite the United Nations Working Group on Disappearances to visit Sri Lanka" says last month letter addressed by the A. I. to the Minister of National Security. By doing so, the letter says that the government of Sri Lanka could "Substantially alleviate the sorrow and anguish of the families who till now, have searched in vain for their relatives who have "Disappeared".

The following is the text of the letter from A. I. addressed to the Minister concerned:—

More than 30 Sri Lankans have been reported "missing" since Amnesty International called on the Government of Sri Lanka last month to set up an inquiry into alleged abductions by the country's security forces.

In a letter to Sri Lanka's Minister of National Security, the human rights organization said it was gravely concerned that the Government appeared to have taken no action to clarify the fate of 272 cases already submitted to it by Amnesty International.

The six-page letter, sent to The Hon. Lalith Athulathmudali on 14th October 1986, said the Government should now consider inviting the United Nations Working Group on "Disappearances" to visit Sri Lanka to examine such cases in the country.

Amnesty international said it was reacting to an earlier public Government invitation for it to file legal action on such cases before the Sri Lankan courts, so that witnesses to the arrests of "disappeared" people could be examined.

Although the Government, in a statement issued by its Media Centre on 29th September, had offered to guarantee the safety of witness filing petitions in the Sri Lankan Courts, Amnesty International said nearly all relatives or other witnesses who had contacted it in such cases had expressed fears of reprisals if their identites were disclosed.

In a report issued on 10th September, Amnesty International said that existing legal measures available in the Sri Lankan courts could not give "effective relief" to relatives searching for the "disappeared". It said independent, impartial, machinery was needed to investigate the cases, with powers to protect witness. Amnesty International said the Government had an internationally recognised obligation to take effective measures to clarify "disappearances".

The Government's earlier statement criticized Amnesty International for not referring in its report to information on "disappearances" that the Sri Lankan authorities had already submitted to the United Nations. But Amnesty International said it had never been sent the information by the government and its three most recent urgent requests for this information had received no goverhment reply.

Obituary

Mr. Mano Kadirgamar

Mr. Mano Kadirgamar of The Loyds Bank died in London on Sunday the 19th of October. He leaves behind his wife Pathmaranee a son and a daughter. The funeral took place in London on Saturday the 25th of October.

***Address*:**
No. 33, The Glen Village Way
Pinner — Has — 5 AX
Middle Sex
England.

* * *

Mrs. Sugirthamalar Nalliah

The death occured on Friday the 24th of October of Mrs. Sugirthamalar Nalliah wife of the late Nalliah of Kopay. The funeral took place at her residence at Kopay on the following day. The remains were then removed to St Marys cemetery Kopay for interment

She was the sister of Mrs. Manonmany Rasiah, Mrs. Satkunamany Selvaratnam and Mrs. Jeyamalar Jeevanayagam of Kopay.

* * *

Mrs. Sornammah Gunaratnam

The death occurred on Monday the 27th of October of Mrs. Sornammah Gunaratnam wife of Mr. R. M. Gunaratnam former Vice Principal of Hartley College Point Pedro.

The funeral took place at the residence of Mr. J. Nalliah at Chundikuli Jaffna. Mr. S. Karunairajan conducted the service and preached the sermon. The remains were then removed to St. Johns Church cemetery for interment

She leaves behind besides her husband Mr. K Pooranam pillai Dr. K Thevananthampillai (brothers) Mrs J Nalliah (sister), Dr. M K Gunaratnam Dr D J Gunaratnam (sons), Mrs Sarojinithevi Jeyaratnam and Mrs Thevy Shanmugasundaram (daughters).

J. D. C. S. I. Women's Fellowship Christian Home Festival

on
15th November 1986 at 9 a.m. in the Manipay Church.

All are cordially invited.

President
Women's Fellowship.

Wanted

An Office Assistant for the C. C. F. Project Officer.

Should be able to type in English and Tamil.

Apply before 25-11-86 to:
The Project Officer,
C. C. F.
Diocesan Office,
Vaddukkoddai.

Memorial to Late Dr. Mrs. Pakkiam Retnanandam

A ward for free treatment was opened at McLeod Hospital. Inuvil on 15th October 1986 at 3.30 p.m. and was blessed by Bishop Ambalavanar. The ceremony included the unveling of a photo of the late Dr. Mrs. Pakkiam Retnanandam who had served the Hospital from 1929—45, and again as Outdoor Medical Officer from 1960—64. The members of the Medical Board, the Hospital Staff and a few members of the public including the close relatives of the late Dr. Mrs. Retnanandam and of Mr. Retnanandam were present.

Mr. Rajan Kadirgamar, on behalf of the Medical Board, referred to the services of the late Dr. Mrs. Renanandam, Mr. Retnanandan thanked the Medical Board and the Hospital Management for the opportunity provided to perpetuate his late wife's memory in the place she had loved most and had rendered service in the missionary spirit of the late Dr. Ida Scudder, her Principal at Vellore Medical College and of Dr. Isabelle Curr of Inuvil Hospital. Mr. Retnanandam also praised the spirit of love and service that has been prevailing in the Hospital among the staff.

Central College Student Shot dead

Mas. Ponnambalam Vipulanantham a seventeen year old Advanced level student of Jaffna Central College succumbed to gun shot injuries on Thursday the 30th of O[illegible] Vipulanan[illegible] out his [illegible] the first [illegible] when [illegible]

— Vide: [illegible] 31-10-86.

உதயதாரகை

UTHAYATHARAKAI

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது

"நீதி ஜனத்தை உயர்த்தும்: பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்"

மலர் 146] 7-11-86 [இதழ் 45

விழிப்புலனற்றோரின் அடையாளச் சின்னம் வெள்ளைப் பிரம்பு

அ. ரவீந்திரன்

வெள்ளை நிறப் பிரம்பு ஒன்றினைத் தமது கரங்களில் ஏந்திய வாறு வீதிகளிற் செல்லும் விழிப் புலனற்றவர்களை நாம் அன்றாடம் சந்திக்கின்றோம், கண்பார்வையற்றவர்கள் தாம் செல்லும் வழியிலுள்ள தடைகளை அறிந்து கொள்வதற்காகவே இத் தடியினைத் தமதுகைகளில் தாங்கிச் செல்கின்றனர் என்றே நம்மில் அநேகர் கருதுகின்றனர், ஆனால் இவர்கள் தாங்கிச்செல்லும் இவ் வெள்ளைப்பிரம்புபற்றி நாம் அறிந்திருக்க வேண்டியவை அநேகமுள்ளன.

வெள்ளைப்பிரம்பு பார்வையற்றவர்களைப் பொது மக்களுக்கு அடையாளங் காட்டுகின்ற ஓர் அடையாளச் சின்னமாகும். இது சர்வதேச ரீதியாக, சட்டரீதியாகப் பார்வை யற்றவர்களின் அடையாளச் சின்னமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எனவே, இவ்வெள்ளைப் பிரம்பைத் தாங்கிச் செல்லும் ஒருவர் நிச்சயமாக ஒரு பார்வையற்றவர், அல்லது மிகவும் குறைந்த பார்வையுடையவர் என்பதை நாம் ஐயமேதுமின்றி அறிந்துகொள்ள முடியும், இவ்வெள்ளைப் பிரம்பு பார்வையற்றவர்களைச் சுயமாக இயங்கவைக்க பார்வையுள்ள ஒரு வழிகாட்டியின் உதவியின்றியே ஓரிடத்திலிருந்து பிறிதோர் இடத்திற்குச் செல்வதற்குத் துணைபுரிகின்றது. அதனால் விழிதனில் ஒளியிழந்தோரால் இவ் வெள்ளைப் பிரம்பு கண்களுக்குச் சமமானதாக மதிக்கப்படுகின்றது. மேலும், இவ்வெள்ளைப்பிரம்பு பார்வையற்றவர்களுக்குத் தேவையேற்படும் பட்சத்தில் உதவி புரியவேண்டும் என்பதனை ஏனையோருக்கு நினைவூட்டுகின்ற ஓர் சாதனமாகவும் திகழ்கின்றது.

1930-ம் ஆண்டு அமெரிக்க இலினோய் மாவட்டத்திலுள்ள பியோரியா என்னுமிடத்தில் முதன்முதலாக வெள்ளைப்பிரம்பு பார்வையற்றவர்களின் அடையாளச் சின்னமெனச் சட்டத்தில் எழுதப்பட்டது இன்று சர்வதேச ரீதியாக இவ் வெள்ளைப் பிரம்புக்குப் பல சலுகைகள் வழங்கப் பட்டுள்ளன. இவ்வெள்ளைப் பிரம்பைத் தாங்கிச் செல்லும் ஒருவருக்குப் பாதையிலே முதலில் நடந்து செல்லும் உரிமையுண்டு பாதையை முதலில் கடக்கும் உரிமைஉண்டு பஸ் போன்ற பொதுப் போக்குவரத்து வாகனமொன்றை எவ்விடத்திலேனும் நிறுத்தி அதில் ஏறிக்கொள்ளும் உரிமையும் உண்டு. வெள்ளைப் பிரம்பைத் தாங்கிச் செல்லும் ஒருவருக்கு யாதேனுமோர் விபத்து ஏற்படுத்தப்பட்டால், சாதாரணமாக அவ்வாறான விபத்து ஒன்றுக்கு அளிக்கப்படும் தண்டனையைவிட இவ்விபத்துக்கு அதிக தண்டனை அளிப்பதற்கும் சட்டத்தில் வகைசெய்யப்பட்டுள்ளது. இவ்வாறு இவ்வெள்ளைப் பிரம்புக்குப் பல அங்கீகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. பெரும்பாலும் இவை அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற மேலை நாடுகளில் பேணப்பட்டு வருகின்றன. நமது நாட்டு மக்களிடையேயும் தற்போது இவ் வெள்ளைப் பிரப்பை மதிக்கின்ற மனப்பக்குவம் ஓரளவுக்கு உருவாகியுள்ளது. இதனை மென்மேலும் வளர்ப்பதற்குத் தொடர்பு சாதனங்களின்பங்கு மிகவும் மகத்தானது.

பார்வையற்றவர்கள் இந்த வெள்ளைப்பிரம்பின் உதவியுடன் எவ்வளவுதான் தனித்து இயங்கியபோதிலும், தவிர்க்கமுடியாத சில சந்தர்ப்பங்களில் பார்வையுளளவர்களின் உதவி அவர்களுக்குத் தேவைப்படவே செய்கின்றது. உதாரணமாக சனசந்தடியான ஒரு வீதியைக் கடப்பதற்கு அல்லது குறிப்பிட்ட ஒரு கட்டடத்தைக் கண்டுபிடிப்பதக்குப் பார்வையற்ற ஒருவரால் முடியாதிருக்கலாம். அவ்வேளையில் அவருககு உதவவேண்டியது பார்வையுள்ளோர் ஒவ்வொருவரினதும் கடமையாகும். பார்வையற்ற ஒருவர் தனது வெள்ளைப்பிரம்பின துணைகொண்டு தான் எடுத்து வைக்கப்போகும் அடுத்த அடிக்குரிய தூரத்தை மட்டுமே உணர முடியும். அதற்கு அப்பாலுள்ளவை பற்றி உணர்ந்து கொள்ள அவரால் நிச்சயமாக முடியாது. யாராவது வெள்ளைப் பிரம்பைத் தாங்கிய ஒருவர் வீதியிலே யாதேனுமோர் தடையை நோக்கி நடந்து கொண்டிருப்பதைக் காண நேர்ந்தால் உடனடியாக அதுபற்றி அறிவித்து, அவர் அத்தடையில் மோதி ஓர் விபத்தை ஏற்படுத்திக் கொள்ளாமல் செவ்வனே தனது பயணத்தைத் தொடர்வதற்கு உதவவேண்டியது பார்வையுள்ள நம் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

பார்வையற்றவர்களும் நம்மைப்போன்ற மனிதர்களே. நம்மைப்போல அவர்களுக்கும் வீதியிலே நடந்துசெல்லும் உரிமையுண்டு என்பதனை நாம் மதித்து உணரவேண்டும். சட்டத்திற்காக அன்றி. இயல்பாகவே எமது உள்ளத்திற்தோன்றும் மனிதாபிமான சிந்தனையின் அடிப்படையில் நாம் இவ் வெள்ளைப்பிரம்புக்கு மதிப்பளித்து அதனைத் தாங்கி வருவோருக்கு உதவ முன்வரவேண்டும். மனித குலத்திற்கு நாம் ஆற்றும் மகத்தான பணிகளில் இதுவுமொன்று என்பதனை நாம் மனதிலிருத்திச் செயற்படுவோமாக.

— [நன்றி: ஈழநாடு]

★ பாலர் நேசன் ★

— சிறுவர் மலர் —

நிரப்புங்கள்

மூவிரண்டு குடங்கள் முழுதும்
வெறுமை கானூர் கிணற்றடியில்
நிரப்புக நீரால் என்றார் எங்கள்
மரித்துயிர்த்த இயேசுபிரான்
உண்மை எது என்றறிவீர்
நன்மைவிரும்பும் சபையோரே!
வறுமையுண்டு நம்வாழ்வில்
நிறைவுகாணத் துடிக்கின்றோம்
நிரப்பும் பணியை செய்திடவே
நித்தம் இயேசு அழைக்கின்றார்
நிரப்பும் பணியிது குறைவானல்
நித்தம் பிணி பல மிகவாகும்
உத்தமமான பணி வழா இறைவன்
சித்தம் உணர்ந்து நிரப்புங்கள்
புத்தம்புதிய திராட்சைரசம்
வற்றாது பாயும் நம்சபையில்
மற்றவர் மகிழ குடம் நிரப்பியகாட்சி
சற்றேனும் மறையாது இருக்கட்டும்
சரித்திரம் புதிதாக மலரட்டும்,

A. V. Y.

செய்திகள்

அயலாராயிருக்க அழைப்பு
(டியா கொனியா — 2000)

இம்மாதம் 18 ஆம் திகதி தொடக்கி 26 ஆம் திகதி வரை சைப்பிரஸ் நாட்டிலுள்ள லார்னகா என்ற நகரில், அனைத்துலக சபைகள் மன்றத்தின் ஆதரவில், உலகத்தின் வறியோர்க்கும் குறிப்பாக அகதிகளுக்கும் திருச்சபை எவ்விதம் உதவிப் பணிகளைச் செய்தல் வேண்டும் என்பதை, அனைத்துலக மட்டத்தில் ஆலோசனை மாநாடொன்று நடத்தப்படும்,

இந்த மாநாட்டின் பொருள் — "பணிவிடை — 2000" என்பதே. அதாவது, அப்போஸ்தலர் காலந்துவங்கி திருச்சபை ஆற்றிவந்த பலவகையான பணிவிடைகளை நினைவுகூர்ந்து, அடுதத ஆயிரம் ஆண்டுக் காலத்தை நோக்கி, உள்ளூரிலும் அனைததுலக மட்டத்திலும், புதிய சூழ்நிலைகளுக்கு அமைய, திருச்சபை செய்யவேண்டிய பணிவிடைகளைப் பற்றி இமமாநாட்டில ஆய்வு நடத்தப்படும்.

"அயலாராயிருக்க அழைப்பு" ஒன்பது கிறிஸ்துபிரானின போதனையின் மையத்தையே சுட்டிக் காட்டுகிறது. நாம் அடிக்கடி எங்கள் அயலான் யார் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேணடும. "அயலான்" என்ற பதம், எல்லாவற்றையும் உள்ளடககுகிறது. அது, வயது வேறுபாடு — பால் வேறுபாடு — இனம், சமய வேறுபாடுகள், கொள்கை, தேசிய வேறுபாடுகள் அனைத்தையும் கடந்து நிற்கிறது. இறைவனின் பார்வையில் நாம் அனைவரும் சமநிலையுடைய அயலாராய்ப் படைக்கப் பட்டுள்ளோம், அனைவரும் ஒருவருக்கொருவர் தேவைப்பட்டோராயிருக்கிறோம் என்பதையும் உணர்த்துகிறது.

இந்த ஆய்வு மாநாட்டில் பின்வரும் விடயங்கள் ஆராயப்படுமெனத் தெரிகிறது. — இன்றைய அரசியல், பொருளாதார, சமுதாயத் தாககங்கள், பல்வேறு நிலைகளிலுள்ள மக்களின் உடல் வளததை, ஆன்மீகத் தேவைகளை எவ்விதம் பாதிக்கின்றன?

இததாக்கங்களின் விளைவாக ஏற்படும் தேவைகளை ஆராய்ந்து, அவற்றின் மூலகாரணங்களைக் கண்டறிந்து, அதற்குத் திருச்சபை செய்ய வேண்டிய தகுந்த சேவைகள் என்ன என்பதைப் பற்றி ஆராய்தல் — சபைகள் எடுகக வேண்டிய உதவித் திட்டங்கள், பணிவிடைகள் ஆகியவற்றிற்கு ஊக்கமளித்துத் தக்க இறையியல் கருத்துக்களை வழங்குதல் — ஆகியனவற்றை ஆராய்தல் என்பதே.

இந்த ஆய்வுக் கூட்டத்துக்கு 103 நாடுகளிலிருந்து ஏறக்குறைய 300 பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள். இவர்களில் பெரும்பாலானோர் சபைத்தலைவர்கள். சிலர் உள்ளூர் மட்டத்திலும், அனைத்துலகு மட்டத்திலும் கிறிஸ்தவ பணிகளில் ஈடுபடுகிறவர்கள. 1983இல் வன்கூவரில் நடைபெற்ற மாநாட்டின் பின், இதுவே அனைத்துலக சபை மன்றத்தால் கூட்டப்படும் மாபெரும் மாநாடாகும்.

இலங்கையிலிருந்து இந்த மாநாட்டிற்கு, பேராயர் அருள்மிகு டி. ஜே. அம்பலவாணர், தேசிய கிறிஸ்தவ சங்க அபிவிருத்தி ஆணைக்குழுவின் செயலர் திருமதி விமல்கா பெர்னாந்தோவும் இமமாநாட்டில் கலநது கொள்வார்கள். தென்இந்திய திருச்சபைப் பேரவைச் செயலர் வண. M. அசாரயாவும், வட இந்திய திருச்சபைப் பிரதமப்பேராயர் அருள்மிகு D. C. கோரே அவர்களும, கிறிஸ்தவ ஆசிய மன்றத்தின் பிரதிநிதியாக வண. ஜோர்ஜ் நைனன், சீரிய வைதீக திருச்சபைப் பிரதமப் பேராயர் G. மார் ஒஸ்தாதியோஸ் ஆகியோர் இந்தியாவிலிருந்து கலந்து கொள்வார்கள்.

மணி வாக்கு

கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்.

— லூக்கா 11 : 9

உதயதாரகை

தென்னிலங்கை கிறிஸ்தவர்கள்

சில மாதங்களுக்குமுன், யாழ். ஆயர் அருள்மிகு தியோகுப்பிள்ளை அவர்கள் — ஆயுதம் ஏதாந்தாத அப்பாவித் தமிழ் மக்களை, அரசாங்க ராணுவம் நாளாந்தம் கொன்றும், சித்திரவதை செய்தும் வருவதைப் பகிரங்கமாகக் கண்டித்தார். இதனை எதிர்த்துத் தென் இலங்கைக் கிறிஸ்தவர்களிற் பலர் பத்திரிகைகள் மூலம் எழுப்பிய கண்டனக் குரல்களும் ஆட்சேபமும், அவர்கள் இனப்பிரச்னையை எவ்விதம் நோக்குகின்றனர் என்பது தெளிவாகக் காணப்பட்டது. தமிழருக்கு எதிராக அரசு எடுக்கும் நடவடிக்கைகளை ஆதரிப்பதே தமது கடமையென தென் இலங்கைச் சிங்கள கிறிஸ்தவர்கள் எண்ணுகின்றனர் என்பது தெளிவு.

இந்நாட்டின் சிறுபான்மையினராகிய தமிழருக்கு இன்று நடத்தப்படும் அநியாயம், சமயரீதியில் பௌத்த சிங்கள மக்கள் நடுவில் சிறுபான்மையினராயிருக்கும் தமக்கும் நாளை இதே அநியாயம் நடைபெறக்கூடும் என்பதை தென் இலங்கை சிங்கள கிறிஸ்தவர்கள் உணரவேண்டும். அடக்கி ஒடுக்கப்படுவோரின் சார்பில் குரல் கொடுக்கவேண்டியது திருச்சபையின் கடமை.

தென் இலங்கைக் கிறிஸ்தவர்களின் இன்றைய போக்கைக் கவனிக்கும்போது — சிங்களவர் சிங்களவர்தான், தமிழர் தமிழர்தான், கிறிஸ்தவ சமயம் இவர்களை இன்னும் இணைக்கவில்லை என்றுதான் கூறவேண்டியிருக்கிறது. இனப்பிரச்னை விடயத்தில், தம்முடன் ஒரே கருத்துடையவர்களாய் ஆகமாட்டார்கள் என்ற உண்மையை வடக்கு கிழக்குப் பகுதிகளிலுள்ள தமிழ்க் கிறிஸ்தவர்கள் தெளிவாக உணரத் தொடங்கியுள்ளனர் என்பதை நாம் அறிவோம்.

1977ஆம் ஆண்டு தொடங்கியே, சிங்கள தமிழ்க் கிறிஸ்தவர்களிடையே இனரீதியான பிளவு ஏற்பட்டு வளர்ந்து வருகிறது என்பதை எவரும் மறுக்க முடியாது. தமிழருக்கு எதிராகத் தென் இலங்கையில் நடைபெற்ற வன்செயல்களில், சிங்கள கிறிஸ்தவர்களும் பங்கு பெற்றனர் என்பது அனைவரும் அறிந்த உண்மை. இதற்குத் தக்க சான்றுகளுண்டு. இருந்தும் 1993ஆம் இனக்கலவரங்களில், தமது உயிரையும் பொருட்படுத்தாது, தமிழரைத் காத்த சிங்கள மக்களுக்கு நாம் நன்றியுடையவர்களாய் இருக்கவேண்டும்.

இலங்கையில் உள்ள திருச்சபை, இன்று தன் நிலைமையைப் பரிசீலனை செய்து, கிறிஸ்துவின் சிந்தைக்கேற்ப தான் செயலாற்றுகிறதாவெனச் சிந்தித்தல் அவசியம். பேராயர் அமரர் லக்ஷ்மன் விக்கிரமசிங்க, தமிழர்பால் மிகுந்த அன்பு கொண்டு, தமிழர் நடாத்திவரும் போராட்டத்திற்கான காரணங்களை நன்கறிந்து, அதனைத் தென்பகுதி மக்களுக்கு விளக்கிக் கூறி, அவர்கள் தமிழரின் நிலையைப் புரிந்து கொள்ள வேண்டுமென, தம் வாழ்வின் இறுதிவரை முயன்றுகொண்டேயிருந்தார். தமிழர் சிங்களவரின் ஒற்றுமைக்காக அயராது பாடுபட்டார்.

கடந்த வாரம் தென் இலங்கையிலிருந்து யாழ்ப்பாணம் வந்த வண. பிதா போல் கஸ்பேர்ஸ் அவர்களும், வண. யோகான் தேவானந்தாவும் — 'தமிழ் மக்களின் நியாயமான அபிலாட்சைகள் நிறைபெற வேண்டும். அவர்களின் நீதியான கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அவர்களின் மனித உரிமைகளை வழங்காமல் தமிழ்ப் போராளிகள் ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டுமெனக் கூறுவதால், சமாதானம் உருவாக்கப்படமாட்டாது. தமிழரின் இன்றைய நிலையை தென் இலங்கையில் விளக்குவோம் — என்று கூறினதை நாம் வரவேற்கிறோம்.

இத்தகைய தென் இலங்கைக் கிறிஸ்தவப் பெரியார்,
தமிழர் சிங்களவர் ஆகிய இரு சமூகங்களிடையே பாலம் ஒன்று
அமைக்க முயல்வார்களென நம்புகிறோம். இவ்விரு சமூகங்க
ளிடையே நேச உணர்வைக் கட்டி எழுப்புவதற்கான முயற்சி
களில் ஈடுபட்டு, நேச சக்திகளைத் தென் இலங்கையில் வளர்க்
கத் தகுந்த முயற்சிகள் எடுக்கப்பட்டால், தமிழரின் தன்மானப்
போராட்டத்திற்கு இவை உறுதுணையாய் அமையும் என்பது
நிச்சயம்

வட இந்திய திருச்சபை

வட இந்திய திருச்சபையின் 6 வது பேரவைக்கூட்டம், டெல்லியிலுள்ள பரிஸ்டீபன்ஸ் கல்லூரியில் கடந்த அக்டோபர் மாதம் 3-9 ஆம் திகதி வரை நடைபெற்றது. தெ. இ. திருச்சபையின் செயலாளர் நாயகம் மேற்குறித்த பேரவைக் கூட்டத்திற்கு விருந்தினராக அழைக்கப்பட்டார்.

இப்பேரவைக் கூட்டங்களில் ஆலோசிக்கப்பட்ட மையப்பொருள் — "நீங்கள் எனக்கு சாட்சிகள்" என்பதே, இந்தப் பொருளில் வேத ஆராய்ச்சி நடைபெற்றது. திட்டமிட்டுச் செயற்படும் பாவத்தால் சீர் குலைந்திருக்கும் இவ்வுலகில், பல்வகையான சமய சமூகங்கள் உள்ள சமுதாயத்தில், கிறிஸ்தவர்கள் எப்படி சாட்டி பகரலாம் என்பதை எல்லாரும் கூடி ஆராய்ந்தனர். திருச்சபை — ஒரு புதிய வாழ்க்கை அமைப்புகள் உள்ள புதிய சமுதாய ஒழுங்கில் ஒரு வேறுபட்ட காலத்தில் சாட்சி பகரும்படி அழைக்கப்படுகிறது. ஆற்றல் உள்ள கிறிஸ்த்தவர்களாய் செயற்பட கிறிஸ்துவுக்குள் வல்லமையால் நிரப்பப்படவேண்டும் என்ற உண்மையை வலியுறுத்தினர்.

அடுத்த இரண்டு ஆண்டுக் காலத்திற்கு பின்வரும் புதிய அலுவலாளர் தெரிவுசெய்யப் பட்டனர்.

பிரதமப் பேராயர் — பேரருள்மிகு டின் தயாள் (லக்நௌவின்)

உதவித் தலைமைப் பேராயர் — அருள்மிகு ஜோன் E. கோஸ் (தார்ஜீலிங் — பேராயர்)

பொருளாளர் — திரு. K. A. தே (De)

செயலாளர் நாயகம் — அருள்திரு பிரதம B. சன்றம்

இப்புதிய அலுவலாளருக்கு எங்கள் வாழ்த்துக்கள்.

இப்படிச் செபித்தனர்

ஆசிய கிறிஸ்தவ பேரவை ஆசிய இளைஞர் வாரத்தை 'ஒக்டோபர் 13ஆம் திகதி முதல் 19ஆம் திகதி வரை குறித்திருந்தது. ஆசிய இளைஞர்கள் தமது நாட்டின் மட்டில், தமது கரிசனையைத் தியானித்துத் தமது விசுவாசத்தை ஆசிய உண்மை நிலைகளில் ஆழப்படுத்தல் வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும்.

இதில் பங்குபற்றியவர்கள் தமது விசுவாசத்தைப் பகிரும் முகமாகவோ, தாம் அறிந்துகொண்டதை மற்றவர்களுக்குக் கொடுத்துச் சமுதாயத்தை மாற்றி அமைக்கும் முகமாகவோ செபங்கள், கவிதைகள் நாடகங்கள் எழுதப் பணிக்கப்பட்டார்கள். அவற்றில் சிலசெபங்கள் பின்வருமாறு.

'நாம் புதிய ஆசிய திருச்சபையாக ஆசிய சரித்திரத்திற் கனி கொடுக்கும் புதிய வித்துக்களாக மாற முடிவு எடுக்கிறோம்'

'பலம் பொருந்திய சிலரின் அவாக்களை நிறைவு செய்வதற்காக உலகம் அழிக்கப்படுகிறது. அவர்கள் தம் செல்வாக்கையும், பணத்தையும் வளர்த்து வருவதற்காக மக்களைக் கொலை செய்கிறார்கள்"

உங்களுக்குத் தெரியுமா?

1. கோவாவின் தலைநகரமான 'பனாஜி' யிலுள்ள ஒருதெருவின் பெயர் — "*18th June Road*"
2. இந்தியாவிலேயே முதன் முதலாக காபிச் செடி சிக்மங்களூர் பிரதேசத்தில் தான் பயிரிடப்பட்டது. இப்பொழுதும் கூட இங்கு பயிராகும் காபி தரத்தில் மிகவும் சிறந்தது.- (Hindustan Times)
3. தேன் சுத்தமானதா, கலப்படமா என்று அறிந்துகொள்ள ஒரு வழி இருக்கிறது. சுத்தமான தேனை எறும்புகள் நாடுவதில்லை.
4. இந்தியாவில் (தமிழ் நாட்டில்) பெண்களுக்கென்று முதன் முதல் வெளி வந்த தமிழ்ப் பத்திரிகை எது தெரியுமா? 1891ஆம் ஆண்டு வெளிவந்த 'மெணமதிப் போதினி' என்ற மாத வெளியீடாகும்.
5. ஜெர்மனியில் சினிமா சென்சர் போர்டு கிடையாது. அதற்குப் பதிலாக படத் தயாரிப்பாளர்களே ஒன்று சேர்ந்து — "Self Control" போர்டு ஒன்று அமைத்து அதன் மூலம் படங்களைத் திரையிட அனுமதி வழங்குகின்றனர்.

பூலோக கற்பக விருட்சம்

தென்னை மரத்திற்குத்தான் இந்தப் பெயர் சூட்டப்பட்டது.

பித்தவாத உடம்பினரைத் தவிர, மற்றோர் தேங்காய்ப் பாலைத் தவறாமல் பருகினால் தாது விருத்தியும், குளிர்ச்சியும் உண்டாகும்; சிறுநீர் பெருகும். உள் இரணங்களை ஆற்றும். வயிற்றிலுள்ள சிறு புழுக்களை வெளியேற்றும்.

நன்கு முற்றிய தேங்காய்ப் பாலை வாரமிருமுறையோ அல்லது மும்முறையோ தேய்த்து சுமார் அரைமணி கழித்து தலைமுழுகினால், தணியாத சூடு, கண் எரிச்சல், தலைமயிர் உதிர்தல், பொடுகு, நமைச்சல் நீங்கும், தலைமயிர் வெண்மையாகாது.

நாக்குப் புண், வாய்ப்புண், தொண்டைப் புண் உதட்டு ரணம் உள்ளவர்கள் தேங்காய்ப்பாலைத் தினமும் இருமுறை வாயிலிட்டு நன்கு கொப்பளித்து கீழே துப்பவும். மூன்றாம் முறை ஒரு மிடறு குடிக்கவும்.

இளநீர் வழுக்கையை தினமும் சாப்பிட்டால் சிறுநீர் பெருகும். சூடு தணியும். இருமல், கபம், சயம் குறையும்.

இளம் மட்டையை இடித்துப் பிழிந்த நீரை தினமும் பருகினால், அதிக சிறுநீர் போதல், நீரிழிவு, நீர்ச்சுருக்கு, வயிற்றுக்கடுப்பு, ஆசன வாய் இரணம் ஆகியன போகும்.

— மூலிகை மணி

"உலகைப் படைத்த தந்தையே நாம் மனிதர்களாகவும் பலவீனர்களாகவும் இருக்கிறோம் எம் மத்தியில் நடக்கும்கொடுமைகளைப் பார்த்துப்பயப்படுகிறோம். நீதிக்கான எமது பாடுகள் எமது இரத்தத்தில் என்றுமே நின்று விடாத நீர் ஓட்டம் போல ஓடட்டும்."

— (ஆதாரம் பாதுகாவலன்

EDITORIAL

The Political Crisis and Public Security

Jaffna Central College (a school founded by the Wesleyan Mission in 1834) situated in the heart of the town became the scene of a gory tragedy on 30-10-86 at about 9.30 a. m.

A targeted bullet reportedly from the area of the Jaffna ramparts struck *Ponnambalam Vipulananthan* (age 17), a Prefect of Jaffna Central College as he was assidously engaged at about 9.30 a. m. in calming down a large group of students on the top floor of the Rev. P. T. Cash Memorial Block, who had become flustered by the explosions they heard right accross the esplanade.

Vipulananthan who fell down with bleeding injuries was immediately rushed to the hospital, where despite all efforts to save his life, he succumbed to his injuries at apout 11 a. m. Another school boy tally was registered in the 'war' that had convulsed the country for the last three years.

At school, Vipulananthan was an all-rounder. In one branch of Oriental instrumental music he had won special acclaim. He could play the *Miruthangam* with the skill of a professional and had participated in over thirty recitals on public platforms. The 'war' in Jaffna has claimed the cream of our youth.

In the meanwhile, the rash of shells on the same day, claimed two victims in and around the Jaffna Hospital. A young motor cyclist who had taken his aunt in his pillion to the hospital to see a patient during visiting hours and dropped her at the entrance did not return to take her as he had promised. He fell a victim to a shell as he was proceeding towards the bazaar along hospital road, to do some *Deepavali* shopping.

Some 33 people were reported injured on that day. The very sight of the injured wheeled along the corridor, the blast of shells and the concomitant confusion and disarry in the hospital caused the death by shock of a lady teacher of the Vaddukoddai Thirunavukkarasu Vidyalaya who was waiting at the Clinic to get the doctor to examine her husband who was a patient.

Reporting on these incidents the Government media centre in Colombo stated under the caption "*Terrorists shell......forces retaliate*":—

> "Terrorists fired 15 shells from the Clock Tower and the Regal Theatre and the Hospital grounds. Troops fired back with eight mortars. (DN 31-10-86)

The War is on, in Jaffna with a sinous complexity of problems. In almost all the controntations, the civilian deaths outnumber the casualties among the two combatants — the government security forces and the militant groups.

The Government Agent has, it is learned, announced that the security of civilians as individuals or groups is an ambit of administration in which he can do very little.

The question then arises to what extent a democratic civilian government can give the Army the power to guarantee public security.

In this context, we are reminded of a comment made by a fact finding mission of the *International League of Human Rights* (ILHR) which visited Nicarugua recently. Said a member of the team :—

> "Nobody cares a damn about human rights there. *It is a place where the people are totolly incidental.* (Italics ours).

A Decisive Moment

"The next two weeks will be most decisive in the history of Sri Lanka" was the opinion expressed by the National Security Minister, Lalith Athulathmudali, addressing a meeting at *Indiruwa* on 28-10-86, after opening a two storeyed school building at the Ganegola Maha Vidyalaya.

The Minister has expressed the view that if the 'terrorists' refuse to settle things peacefully the government will be compelled "to decide on an alternative and pursue it most determinedly".

The *Daily News* of 29-10-86, we note, has seen "a silver lining" in the news and opinions expressed in the media in India on the intransigence of the "terrorists", particularly in the reports of possible U. S. assistance to Sri Lanka, to fight terrorism even though such assistance would be limited to security measures at the International Airport at Katunayake.

"The sovereign state of Sri Lanka" says the Editorial of the DN of 29-10-86 "has every right to seek assistance of its friends world wide to tackle the menace that has far too long bled the country" [The 'menace' refers obviously to the menace of 'terrorism].

The other side of the 'coin' is presented to us in an editorial by the *World Today* of 31-10-86:—

> "Every state represents accumulated violence to be organised for attack or defence. when that violence is transferred to individuals, each of us is the State. We may respond with hatred and certainly there is now a terrible risk of racial revenge."

On the subject of *intransigence* of the militants which according to some Sri Lankan politicians is standing on the way of PEACE in the country, a statement of the LTTE leader given to the *Hindu* on 4-9-86 in an interview, has to be given objective consideration:—

> "Those who have supported the Tamils to an extent like Vijaya Kumaranatunga have had bombs hurled at their platforms. So long as a racist, chauvinist context prevails there we are left with no alternative."

Subsequent events in Parliament have attested to the authenticity of these comments. There has been a powerful lobby mounted against Provincial Councils by the Opposition at the same time as the government was pointing an accusing finger at the militants for pressing their claims for *security* and *identity* in the Devolution superstructure. *Intransigence*, but on which side?

Some light has to emerge out of the tunnel. For, the worst of all options in Sri Lanka is to find ourselves with our ruined industries our economy our education and our culture with "a super abundance of men who have no trade but soldiering".

Diakonia 2000 — Called to be Neighbours

The World consultation on the Inter Church Aid, Refugees and World Service of the World Council of of Churches is to take place in Larnaca, Cyprus from the 18th to the 26th of November this year. The Theme of the Consulatation is 'Diakonia Called to be Neighbours'. The word 'Diakonia' is the New Testament Greek word for 'service'. "Diakonia 200" reminds us of the various forms of service the Churches have engaged themselves in, since the days of the Apostles and indicates the need to look towards the next millenium and adjust our local and global service to new realities.

"Called to be Neighbours" points to a central element in the preaching of Christ himself and we are challenged to constantly reflect on our understanding of who our neighbour is. "Neighbour" is all encompassing: transcending differences of age, sex, race, creed, ideology, and nationality. In the eyes of God we are created equal as neighbours and are all in mutual need of each other. We only have to rediscover how.

Some of the basic questions that the Consultation will address itself to are the following:-

- The current political and economic and social dynamics which affect the physical and spiritual needs of people in their various situations.
- Giving these dynamics the best possible forms of Christian service or sharing that would tackle the root cause of these needs.
- Theology or theologies which inspire Churches to engage in service or aid programmes.

About 300 participants from 103 countries will be at this Consultation. Most of them are Church leaders and those involved in Christian service locally and internationally. This is the first major world Consultation sponsored by the World Council of Churches since the Vancouver Assembly in 1983. The Consultation will attempt to formulate and define a new vision of ecumenical witness and service for all Continents in the context of a changing world situation.

The Rt. Rev. D. J. Ambalavanar, Bishop of the Jaffna Diocese of the C. S. I. and Mrs. Nimalka Fernando, Secretary of the Development Commission of the N. C. C. will participate from Sri Lanka. The Rev. M. Azariah, General Secretary of the C. S. I. Synod the Rt. Rev. D. C. Gorai, Moderator of the Church of North India, the Rev. George Ninan of the C.C.A. and the Most Rev. G. Mar Osthathios of the Syrian Orthodox Church will be among those participating from India

Uduvil Church

Mrs. Jayanthy David

We regret to record the death which occurred at Samanthurai (EP) of *Jayanthy* (36), wife of Dr. V. R. David, Dental Surgeon, Government Hospital Samanthurai and daughter of Mr. George Stephen and Mrs. Freda Stephen of "Love Lane", Uduvil.

The Funeral took place at the residence of the deceased at Uduvil on Wednesday (8-10-86) at 3 p. m. Rev. D. C. Ratnasingam officiated at the Service, assisted by Rev Karunairajan of the Methodist Church, Pt. Pedro. Rev. D. R. Ambalavanar paid the tribute.

The remains were interred at the Uduvil Church burial grounds.

Jeyanthy leaves behind besides her parents and husband, her twin sister Vamalanthy and brothers Jeyakumar, Eric, Sathian and Felix, and a large circle of friends and relations to whom her parting has been a very sad wrench.

Registered as a Newspaper at the G.P.O., Sri Lanka under No. Q/96/News/86.

Printed for the Jaffna Diocese of the Church of South India at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 7th November, 1986 and published by Mr. Alvappillai Rajasingham, 330, Navalar Road, Jaffna.